நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936
dhinatamil.tn@gmail.com • மாற்றத்தின் ஆரம்பம் • www.dhinatamil.com • dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 04.02.2026 . மலர் 04 . இதழ் 034. புதன்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 04.02.2026 . VOL 04 . ISSUE 034. WEDNESDAY. PAGES 4. Rs.5

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

## அண்ணன் வாயை திறக்கவே மாட்டேங்கிறார்... தேனி, சிவகங்கை மாவட்டங்களில்

# ஓ.பி.எஸ். கூடாரம் காலி

தேனி, பிப்.04-

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வத்தின் ஆதரவாளர்கள் பலர் அதிமுகவில் தொடர்ந்து இணைந்து வருகின்றனர். ஓ.பன்னீர்செல்வத்தை அதிமுகவில் சேர்க்கவே முடியாது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி கடந்த வாரம் திட்டவட்டமாக அறிவித்து விட்டார்.

இந்நிலையில் ஓபிஎஸ்ஸின் சொந்த மாவட்டமான தேனியிலேயே அவருக்கு தொண்டர்கள் ஆதரவு இல்லை என்பதை வெளிப்படுத்தும் முயற்சியில் அதிமுக ஈடுபட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளில் கட்சித் தலைமை உத்தரவின்படி அமைப்புச் செயலாளர் எஸ்டிகே.ஜக்கையன் உள்ளிட்டோர் தீவிரம் காட்டி வருகின்றனர்.

அதன்படி கடந்த சில நாட்களாக தேனி மாவட்டத்தில் ஓபிஎஸ் அணியைச் சேர்ந்த பலரும் அதிமுகவில் தொடர்ந்து இணைக்கப்பட்டு வருகின்றனர். கன்னிசேர்வைபட்டி கிளைச் செயலாளர்கள் சோலைமணி, முருகேசன், ராமர், பாண்டி, விஜயகுமார், சுருளிமுத்து உள்ளிட்ட 120-க்கும் மேற்பட்டோர் நேற்று முன்தினம் அதிமுகவில் இணைந்தனர். அவர்களை ஜக்கையன் வரவேற்றார்.

இதேபோல் ஓபிஎஸ்ஸின் சொந்த தொகுதியான போடி பகுதியைச் சேர்ந்த அவரது ஆதரவு நிர்வாகிகளான மீனாட்சிபுரம் பேரூர் தலைவர் திருப்பதி, பேரூர் செயலாளர் ராஜலிங்கம், அவைத் தலைவர் சின்ன கருப்பு, மாவட்டப் பிரதிநிதிகள் அறிவழகன், நாகம்மாள், ராஜப்பன், வார்டு செயலாளர்கள், கவுன்சிலர்கள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்டோர் நேற்று அதிமுகவில் இணைந்தனர்.

ஏற்கெனவே மேல்மட்ட நிர்வாகிகள் பலரும் அதிமுக, திமுகவில் இணைந்த நிலையில் தற்போது நகர், ஒன்றிய, கிராம அளவில் வட்டார நிர்வாகிகளும் அணி மாறி வருவதால் ஓ.பன்னீர் செல்வம் அணிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதே போல ஓபிஎஸ் மவுனத்தால் சிவ கங்கை மாவட்டத்தில் அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகத்தினர், அதிமுகவுக்கு தாவத் தொடங்கியுள்ளனர்.

அதிமுகவிலிருந்து ஓ.பன்னீர்செல்வத்தை நீக்கியதும் தனது செல்வாக்கை நிரூபிக்க பழனிசாமி முடிவு செய்தார். அதற்காக அவர் ஓபிஎஸ்-க்கு ஆதரவாளர்கள் அதிகமுள்ள தென்மாவட்டமான சிவகங்கையில் கடந்த 2023 மார்ச்சில் மிகப் பெரிய பொதுக் கூட்டத்தை நடத்தினார்.



மதுரை மாநகராட்சி மண்டலம் 5 வார்டு எண்.94 திருநகர் அண்ணா பூங்கா வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அறிவியல் பூங்காவினை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். அருகில் ஆணையாளர் சித்ரா விஜயன், மாமன்ற உறுப்பினர்கள் ஸ்வேதா, சிவா, ரவிச்சந்திரன், விஜயா, இந்திராகாந்தி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## அரசியலில் ஆழம் தெரியாமல் காலை விட்டதால் பரிதாபம்

ஆனால், பொதுக் கூட்டத்துக்கு முந்தைய நாள் சிவகங்கைக்கு பழனிசாமி வருவதைக் கண்டித்து பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டத்தை ஓபிஎஸ் ஆதரவாளர்கள் நடத்திக் காட்டினர். ஓபிஎஸ் அணியில் அப்போதைய கொள்கை பரப்புச் செயலாளராக இருந்த மருது அழகுராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஏற்கெனவே ஓபிஎஸ் தரப்பு சென்னையில் அதிமுக தலைமை அலுவலகத்தைக் கைப்பற்றிய போது சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த பலர் ஆதரவாக இருந்தனர். அந்தளவுக்கு ஓபிஎஸ்-க்கு சிவகங்கை மாவட்டத்தில் அதிக ஆதரவாளர்கள் உள்ளனர்.

இந்நிலையில், `அதிமுகவை மீட்போம்' என்ற சபதத்துடன், அதிமுக தொண்டர் உரிமை மீட்புக் கழகத்தை ஓபிஎஸ் தொடங்கியும் எந்த விதப் பலனும் இல்லை. ஓபிஎஸ்-க்கு பக்கபலமாக இருந்த மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம், மருது அழகுராஜ் உள்ளிட்டோர் திமுகவில் இணைந்தனர்.

ஓபிஎஸ்-ன் நம்பிக்கைக்குரிய ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தர்மர் எம்.பி.யும் மீண்டும் அதிமுகவிலேயே இணைந்தார். சமீபத்தில் அதிமுகவில் இணையத் தயாராக இருப்பதாக ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தும், அதை பழனிசாமி ஏற்கவில்லை.

அதன் பின்னரும் தனது அரசியல் நிலைப்பாடு குறித்து ஓபிஎஸ் மவுனம் காத்து வருகிறார். இதனால் அவரது ஆதரவாளர்கள் தொடர்ந்து குழப்பத்தில் உள்ளனர். இதைப் பயன்படுத்தி சிவகங்கை மாவட்ட அதிமுக நிர்வாகிகள், ஓபிஎஸ் ஆதரவாளர்களை தங்கள் பக்கம் இழுக்கும் பணியில் இறங்கியுள்ளனர்.



அதிமுக மாவட்டச் செயலாளர் பி.ஆர்.செந்தில்நாதன் எம்.எல்.ஏ. முன்னிலையில் இளையான்குடி தெற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகத்தினர் நேற்று அதிமுகவில் இணைந்தனர்.

இதுகுறித்து அதிமுகவில் இணைந்த ஓபிஎஸ் அணியைச் சேர்ந்த சிலர் கூறுகையில், ‘ஓபிஎஸ்-க்கு ஆதரவாக இருந்த சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த மருதுஅழகுராஜ் உள்ளிட்டோர் திமுகவில் சேர்ந்தாலும், நாங்கள் தாய்க் கழகமான அதிமுகவில் சேரத்தான் விருப்பமாக இருந்தோம். மேலும் ஓபிஎஸ்-ம் தனது அரசியல் நிலைப்பாட்டை விரைந்து எடுக்காமல் தாமதப்படுத்தி வருகிறார். இதனால், அவரை நம்பிப் பயனில்லை என்பதால் அதிமுகவில் இணைந்தோம். தொடர்ந்து பலர் அதிமுகவில் சேர உள்ளனர்’ என்றனர்.

## வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சி

திண்டுக்கல் மாவட்டம்,

### திட்டப்பணிகள் விபரம்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு இலட்சம் |
|---|---|---|---|
| 1 | அம்ருத் 2.0 திட்டம் 2023-2024 (குடிநீர் விநியோக அபிவிருத்தி பணிகள்) | 1 | 3541.00 |
| 2 | 2024-2025 மூலதனமான்ய நிதி திட்டத்தின் கீழ் அலுவலக கட்டிடம் கட்டுதல் | 1 | 125.00 |
| 3 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2024-25 (8வது வார்டு பில்டிங் சொசைட்டி தெருவில் சிமிண்ட் சாலை, வடிகால், சிறுபாலம் மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல்) | 1 | 71.49 |
| 4 | 2025-2026 மூலதனமான்ய நிதி திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் அமைத்தல் | 1 | 127.00 |
| 5 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2023-24 (தினசரி சந்தை அமைத்தல்) | 1 | 289.00 |
| 6 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2022-23 (மின்மயானம்) | 1 | 149.00 |
| 7 | நபார்டு நிதி உதவித்திட்டம் 2022-23 | 1 | 151.00 |
| 8 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2023-24 (பேட்டரி வாகனம்) | 10 | 15.00 |
| 9 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2023-24 (பேவர் பிளாக் சாலை அமைத்தல்) | 1 | 71.00 |
| 10 | சிறப்புநிதி திட்டம் 2025-2026 (சிமிண்ட் சாலை அமைத்தல்) | 2 | 99.00 |
| 11 | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்தி திட்டம் 2025 -2026 (சிமிண்ட் சாலை அமைத்தல்) | 1 | 54.50 |
| 12 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2025 -2026 (அங்கன்வாடி மையம் அமைத்தல்) | 1 | 17.00 |
| 13 | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்தி திட்டம் - 2025 -2026 (சிமிண்ட் சாலை அமைத்தல்) | 1 | 123.00 |
| | மொத்தம் | 23 | 4832.99 |

திரு.**செ.சரவணன்,** இ.ஆ.ப
மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல்

திரு.**இரா.இராஜா**
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்

திரு.**பா.சிதம்பரம்,** பி.காம்,பி.எல்,
தலைவர்
வத்தலக்குண்டு பேரூராட்சி

திரு.**ஆ.சரவணக்குமார்,** எம்.ஏ,
செயல் அலுவலர்
வத்தலக்குண்டு பேரூராட்சி

திரு.**இரா.தர்மலிங்கம்**
துணைத்தலைவர்
வத்தலக்குண்டு பேரூராட்சி

## கடலாடி தாலுகா நரிப்பையூரில் ரூ.163 இலட்சம் மதிப்பீட்டில் பனைபொருள் வர்த்தக மையம் - அமைச்சர் அடிக்கல் நாட்டினார்

கடலாடி, பிப்ரவரி. 04–

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட நரிப்பையூரில் கதர் வாரியத் துறையின் மூலம் ரூ.163 இலட்சம் மதிப்பீட்டில் பனைபொருள் வர்த்தக மையம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் தமிழ்நாடு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் பங்கேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் செயற்பதிவாளர் வா.சம்பத் முன்னிலையில். அமைச்சர் கதர் வாரியத் துறையின் மூலம் ரூ. 163 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பனைபொருள் வர்த்தக மைய கட்டிடத்திற்கான அடிக்கல் தொடங்கி வைத்து பேசுகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் பனை வாரிய அமைப்புகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார்கள். அதிலும் இப்பகுதியில் அதிகளவு பனை மரங்கள் கொண்ட பகுதியாக உள்ளதால் பனை வாரிய தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் பனைபொருள் வர்த்தக மையம் அமைக்க உத்தரவிட்டு இன்று அதற்கான பணி துவங்குவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் 88 சங்கங்கள் மூலம் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் வேலைவாய்ப்பு பெற்று பயன் பெறும் வகையில் பனைபொருள் வர்த்தக மையம் செயல்பட உள்ளன.



மேலும் பொதுவாக பனை மரத்தில் எவ்வித கழிவு பொருட்களுமின்றி வேர் முதல் குறுத்து பகுதி வரை அனைத்து பொருட்களும் மக்கள் பயன்பாட்டிற்கு பெரிதும் பயன்பெற்று வருகிறது. அதிலும் குறிப்பாக பனை வெல்லம், பதனீர் போன்ற பொருட்கள் ஏற்றுமதி அளவிற்கு மதிப்பூட்டப்பட்ட பொருளாக இருந்து வருகின்றன.

மேலும் பனை ஒலையில் கலைநயமிக்க அழகு சாதன பொருட்கள் தயாரிக்கப்பட்டு மக்கள் விரும்பி வாங்கும் வண்ணம் இப்பகுதியில் கதர் துறையின் மூலம் கலைநயமிக்க பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இப்பகுதி பனைவாரிய தொழிலாளர்கள் வேண்டுகோளுக்கிணங்க பொருளாதாரம் மேம்பாடு அமையும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கி வருகிறார்கள். மேலும் இதுபோன்ற திட்டங்கள் மூலம் அரசு நலத்திட்ட உதவிகளைப் பெற்று வாழ்வாதாரத்தை மேம்பாடு அடையும் வகையில் பயன் பெற்றிட வேண்டும்

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவுக்கிணங்க ரூ.26 கோடி மதிப்பீட்டில் சுற்றுசாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதே போல் ரூ.20 கோடி மதிப்பீட்டில் ரோஸ்மா நகர் பகுதியில் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுமட்டுமின்றி சாயல்குடி சுற்றி புறவழிச் சாலை அமைப்பதற்கான திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேபோல் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு தனி திட்டமாக காவிரி கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் விரைவில் முடிவறும் நிலையில் உள்ளது. இத்திட்டத்தையும் விரைவில் துவக்கி வைக்கப்படும் என்று கூறினார். இந்த விழாவின் போது அரசு துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கிறிஸ்துவர்களுக்கு எதிரான தாக்குதலை கண்டித்து சிறுபான்மை அமைப்பினர் ஆர்ப்பாட்டம்

திருவண்ணாமலை பிப்.04

வடநாட்டில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறையை கண்டித்தும், ஒடிசா மாநிலம் பர்ஜங்கில் பஜ்ரங்தல் அமைப்பினர் போதகர் பிபின் பிகாரி நாயக்கின் வாயில் மாட்டு சாணத்தை திணித்து கொடுமைப்படுத்தியதை கண்டித்தும் திருவண்ணாமலையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அண்ணா சிலை அருகில் திருவண்ணாமலை மாவட்ட அனைத்து கிறிஸ்துவ திருச்சபைகளின் கூட்டமைப்பு மற்றும் சிறுபான்மை அமைப்புகள் சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பேராயர் சாம்.எஸ்.பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். ஒருங்கிணைப்பாளர்கள் ஜெ.சசில்குமார், ஆர்.ஆனந்தஜீவன், ஏஎல்சி ஜீவரத்தினம், எபிசேனர் இறை அமிர்தம், ஜோசப் சவுந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் தேசிய சிறுபான்மை மக்கள் இயக்க கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் டி.சரவணன் கண்டன பேருரையாற்றினார். ஆற்காடுலுத்ரன் திருச்சபை பேராயர் டி.பீட்டர்பால் தாமஸ், உலக மாதா பேராலயம் மறைக்கோட்ட முதன்மை குரு எஸ்.லூர்துசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மதிமுக மாவட்ட செயலாளர் சீனி.கார்த்திகேயன், இந்திய தேசிய காங்கிரஸ் மாவட்ட தலைவர் கே.குணசேகரன். விசிக மாநில செயலாளர் பு.செல்வம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில குழு உறுப்பினர்



வீரபத்திரன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் ஏ.ஆர். நாசர்உசேன், மாவட்ட செயலாளர் ஏ.ஆர்.கலிமுல்லா, ஆகியோர் கண்டன உரையாற்றினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏஎல்சி துணை தலைவர் ஜெ.மனோவா, செயலாளர் வி.ஜெயராஜ், மத்திய நிர்வாகி ஸ்பர்ஜன் மர்ஃபி, அருட்தந்தை ஞானஜோதி, வந்தவாசி ஜான் அருள்ராஜ், தலைமை போதகர் நெல்சன் ஞானகுமார், டேனியல் குமார், சாம் அரிதாஸ், ஒருங்கிணைப்பாளர்கள் அமுதன், எஸ்.ஜெயசீலன், ஜான் ஜெயசிங், அசோக்குமார், யோசுவா தாமஸ், சத்தியநாதன், ராபின்சன், ஆனந்தராஜ், ஜேம்ஸ் மற்றும் கிறிஸ்துவ திருச்சபைகளின் கூட்டமைப்பு மற்றும் சிறுபான்மை அமைப்புகளின் நிர்வாகிகள் கிறிஸ்துவர்கள் கலந்துகொண்டனர். முடிவில் எஸ்.ராஜசேகரன் நன்றி கூறினார்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கலசலிங்கம் பல்கலை ஆனந்தம் அம்மாள் அறக்கட்டளை நன்கொடை




ஸ்ரீவில்லிபுத்தூர், ஜன.04-

ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்தவமனை, அறுவைச்சிகிச்சைக்கு பின் உள்ள வார்டுகளுக்கு, கலசலிங்கம் மற்றும் ஆனந்தம்மாள் அறக்கட்டளை சார்பில்,நோயாளிகளின் நலத்திட்டத்தின் ஒரு பகுதியாக, குளிரூட்டிகள் மற்றும் நாற்காலிகளை, கலசலிங்கம் கல்விக் குழும தலைவர் முனைவர் கே. ஸ்ரீ தரன் வழங்கினார். நிகழ்ச்சியில் இணைவேந்தர் மற்றும் அறங்காவலர் டாக்டர்எஸ். அறிவழகி, கல்விப்பிரிவுத் துணைத்தலைவர் முனைவர் எஸ். சசிஆனந்த் மற்றும் நிர்வாகப்பிரிவுத் துணைத்தலைவர் பொறியாளர் எஸ். அர்ஜுன்கலசலிங்கம் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்துகொண்டு, மருத்துவமனைகுழுவினரின் மனமார்ந்த நன்றியைப் பெற்றுக் கொண்டனர்.

அருள்மிகு கலசலிங்கம்மருந்தியல் கல்லூரி முதல்வர் முனைவர் என். வெங்கடேசன் வரவேற்புரை வழங்கினார். மருத்துவமனை தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர்ஏ.காளிராஜ் முன்னிலை வகித்தார். விருதுநகர் மாவட்டமருத்துவ மற்றும்கிராமப்புற சுகாதாரசேவை இணைஇயக்குநர்டாக்டர்எஸ்..செந்தில் குமார் தலைமை தாங்கினார்.

அறககட்டளை சார்பில் குளிரூட்டிகள் மற்றும்நாற்காலிகள் டாக்டர்எஸ். செந்தில்குமாரிடம் ஒப்படைக்கப்பட்டன; மருத்துவமனை டாக்டர்கள், அறக்கட்டளைக்கு நன்றிதெரிவித்தனர். பேராசிரியர் முனைவர் எஸ். பி. வினோத்குமார் நிகழ்ச்சியில் நன்றி கூறினார்.

# பேராவூர் வடக்கு குடியிருப்பு பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி பெண்கள் தற்போது காலிகுடங்களுடன் போராட்டம்!



இராமநாதபுரம், பிப். 04-

இராமநாதபுரம் அருகே பேராவூர் வடக்கு குடியிருப்பு பகுதியில் அடிப்படை வசதிகள் இல்லாததால் அப்பகுதி பெண்கள் தற்போது காலி குடங்களுடன் போராட்டம். குடிநீர் வசதி, சாலை வசதி ஏற்படுத்தி தரவில்லை என்றால் தங்களது வாக்காளர் அடையாள அட்டைகளை ஒப்படைத்து விட்டு வருகின்ற சட்டமன்ற தேர்தலை புறக்கணிக்க போவதாக தெரிவிப்பு.

மேலும் பேராவூர் ஊராட்சிக்கு உட்பட்ட வடக்கு குடியிருப்பு பகுதியில் சுமார் 200 க்கும் மேற்பட்ட வீடுகள் 1000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் குடியிருந்து வருகின்றனர். அந்த கிராமத்தில் பல வருடங்களாக முறையான குடிநீர் வசதி மற்றும் சாலை வசதி, மின்சார வசதி போதுமானதாக செய்து தரப்படவில்லை என பலமுறை மாவட்ட நிர்வாகத்திற்கும்,ஊராட்சி அதிகாரிகளிடமும் புகார் மனு கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என புகார் தெரிவித்து நேற்றைய தினம் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு அளித்திருந்தனர்.

இந்நிலையில் தங்களுக்கு காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இருந்து வரக்கூடிய தண்ணீரை ஒரு நாள் மட்டுமே பயன்படுத்த கூடிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், அந்த நீரை பிடித்து வைக்கும் பொழுது உள்ளே புழுக்கள் வருவதாகவும் அவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர். மேலும் வடக்கு புதுத்தெருவில் இருக்க கூடிய நான்கு தெருக்களில் முறையான சாலை வசதி இல்லாததால் மழைக்காலங்களில் இடுப்பளவு தண்ணீரில் செல்லக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர். அது மட்டுமல்லாமல் தண்ணீர் எடுப்பதற்கு சுமார் இரண்டு கிலோ

மீட்டர் தூரம் தள்ளு வண்டிகளை வைத்து தண்ணீர் எடுத்து வரக்கூடிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து காளி குடங்களுடன் தள்ளு வண்டிகளை சாலையில் போட்டு தண்ணீர் வேண்டுமென கோஷங்களை எழுப்பி 50 க்கும் மேற்பட்ட பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் இந்த சட்டமன்றத் தேர்தலுக்குள் தங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தரப்படவில்லை என்றால் வருகின்ற சட்டமன்றத் தேர்தலை புறக்கணிக்கப் போவதாகவும் ஆதார் கார்டு, ஓட்டர் ஐடி. ரேஷன் கார்டு உள்ளிட்டவற்றை ஆட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்க போவதாகவும் கிராம பெண்கள் தெரிவித்துள்ளனர்.

# ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவில் உண்டியல் காணிக்கை 2 கோடியே 31 லட்சம்



இராமேஸ்வரம், பிப்ரவரி. 04-

ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலில் 2 கோடி 31 லட்சம் பக்தர்கள் காணிக்கையாக அளித்துள்ளதாக இணை ஆணையர் செல்லத்துரை தகவல் தெரிவித்தார்.

ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயில் கடந்த மாதம் பக்தர்களால் அளிக்கப்பட்ட காணிக்கை உண்டியல் என்னும் பணி இணை ஆணையர் செல்லத்துரை தலைமையில் காலையில் தொடங்கியது.மாலை வரை கணக்கெடுக்கப்பட்டது. இதில் ஒரு 2 கோடியே 31 லட்சத்தி 56 ஆயிரத்து 985 ரூபாய் தங்கம் 35 கிராம் வெள்ளி 7 கிலோ மற்றும் அயல்நாட்டு நோட்டுகள் 62 காணிக்கை அளிக்கப்பட்டுள்ளதாக இணை ஆணையர் தெரிவித்தார். உண்டில் என்னும் பனியில் சிவகங்கை மண்டல இந்து சமய அறநிலைத்துறை உதவி ஆணையர் தக்கரான சிவகங்கை மண்டல இணை ஆணையரின் பிரதிநிதி ராமநாதபுரம் முதுகுளத்தூர் ஆய்வர்கள். உதவி ஆணையர் ரவீந்திரன் செயல் அலுவலர் முத்துச்சாமி கோட்ட பொறியாளர் மயில்வாகணன் உதவி பொறியாளர் ராமமூர்த்தி மேலாளர் வெங்கடேசன் பேஷ்கார்கள் கமல்நாதன் நாகராஜன் முனியசாமி உழவாரப்பணி ஆன்மீக குழுவினர் வங்கி பணியாளர்கள் கல்லூரி மாணவிகள் பள்ளி மாணவிகள் மற்றும் கோவில் பணியாளர்கள் உண்டியல் என்னும் பணியில் ஈடுபட்டனர்.


## ENROLLMENT NOTICE

After ten days of the publication of this notice and within Three Months thereafter. VIBIN RV S/o. Renganathan Aged 23 Years, Permanently Residing at: D.No. 27 A Poonga Nagar Thiruppuvanam Sivagangai District, Tamilnadu - 630611

Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai& 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

VIBIN RV



உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர




கோவில்பட்டி சட்டமன்ற தொகுதி, மாவட்ட கவுன்சிலர் பிரியா குருராஜின் பிறந்த நாளை முன்னிட்டு தூத்துக்குடி திமுக வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தமிழக சமூகநலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் அமைச்சர் பெ.கீதா ஜீவனை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# வடக்கு தாமரை குளம் வெற்றி வேல் முருகன் கோவில் மகா கும்பாபிஷேகவிழா



தென்தாமரைகுளம், பிப். 04-

வடக்கு தாமரை குளம் வெற்றி வேல் முருகன் திருக்கோவில் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதில் அதிமுக அமைப்பு செயலாளரும் மாவட்ட கழக செயலாளரும், கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினருமான என். தளவாய் சுந்தரம் கலந்து கொண்டு அன்னதானத்தை தொடங்கி வைத்தார். இந் நிகழ்வில் மாவட்ட இணை செயலாளர் சாந்தினி பகவதியப்பன், மாவட்ட ஜெயலலிதா பேரவை தலைவர் என். பார்த்த சாரதி, மாவட்ட ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் ரமேஷ், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு துணை செயலாளர் பாலன், வடக்கு தாமரை குளம் ஊராட்சி கழக பொறுப்பாளர் முத்துசாமி, கிளை கழக செயலாளர்கள் நாகராஜன் தனபால் தனசிங்,வடக்கு தாமரை குளம் கூட்டுறவு சங்க முன்னாள் இயக்குனர்கள் வடிவேல், கணேசன், முருகேஷ் மற்றும் ஒன்றி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை வெற்றி வேல் முருகன் கோவில் அறங்காவலர்கள் செய்திருந்தனர்.


தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!


# தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் சார்பில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்




கிருஷ்ணகிரி, பிப்.04-

தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் சார்பில் கரூர் மாவட்டத்தில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் மற்றும் ஒளிப்பதிவாளரை தாக்கிய நபர்களை கண்டித்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் கு.பழனி தலைமை வகித்தார். மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம் ஆர் கஜேந்திரன், மாவட்ட பொருளாளர் கணேசன்,மாவட்ட செய்தி தொடர்பாளர் மணிகண்டன்,மாவட்ட துணைத் தலைவர் மாதேஸ்வரன்,தமிழ்நாடு பத்திரிகைகள் சங்க நிர்வாகிகள் சரவணன்,சந்திரமோகன், அரிப்புத்திரன்,நந்தகுமார், அருன் ,பசவ ராஜ்,முத்துலிங்கம், சத்யா, மேகராஜன், ரமேஷ், திம்மராஜ்,பர்கூர் ராஜா ,மகி (எ) மகேந்திரன், ஞானசேகரன்,மற்றும் பல்வேறு ஊடகவியலாளர்கள் என 40 பேர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

இதில் பத்திரிகையாளர்களை தாக்கிய கயவர்கள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் வழக்கு பதிய வேண்டும். பத்திரிக்கையாளர்களுக்கு பணி பாதுகாப்பு வழங்க வேண்டும்.பத்திரிக்கையாளர்களுக்கு பாதுகாப்பு குறித்து தனி சட்டம் இயற்ற வேண்டும்.பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



தூத்துக்குடியில் பேறறிஞர் அண்ணாவின் 57வது நினைவு தினத்தை முன்னிட்டு, வடக்கு மாவட்ட திமுக சார்பில் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் கீதா ஜீவன் தலைமையில் அமைதி ஊர்வலம் நடைபெற்றது. ராஜாஜி பூங்காவிலிருந்து வந்து மார்க்கெட் எதிரில் உள்ள அண்ணா சிலையை அடைந்தது. அங்கு அண்ணாவின் சிலைக்கு அமைச்சர் கீதா ஜீவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர செயலாளர் எஸ்ஆர் ஆனந்த சேகரன், மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், கலை இலக்கிய அணி அமைப்பாளர் ஜீவன் ஜேக்கப், முன்னாள் மேயர் கஸ்தூரி தங்கம், மாநகராட்சி மண்டல தலைவர்கள் கலைச்செல்வி திலகராஜ், நிர்மல் ராஜ், பாலகுருசாமி, அன்னலட்சுமி, மாநகர துணை செயலாளர் முருகஇசக்கி, பொதுக்குழு உறுப்பினர் கோட்டு ராஜா வட்டச் செயலாளர் கதிரேசன், மாநகராட்சி கவுன்சிலர்கள் கீதா முருகேசன் சுரேஷ்குமார், வைதேகி, சரண்யா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் இரத்தப் புற்று நோயுள்ள குழந்தை மற்றும் முதிய நோயாளிகளுக்கு விரிவாக்கும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்கள் விளக்கம்




மதுரை, பிப்ரவரி. 04-

மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்கு ஆரோக்கியமான செல்களைப் பாதிக்காமல் புற்றுநோய் செல்களை மட்டும் அழிக்கும் 'இலக்கு சிகிச்சைக்கு புதிய நம்பிக்கையை அளிப்பதாக மருத்துவமனையின் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இரத்தப் புற்று நோயியல் துறையின் தலைவரும். முதுநிலை நிபுணருமான டாக்டர் காசி விஸ்வநாதன் கூறுகையில் "முன்பெல்லாம் தீவிர இரத்தப் புற்றுநோய்க்கு அளிக்கப்படும் கீமோ தெரபியை முதியவர்கள் தாங்குவது கடினமாக இருந்தது. இப்போது வந்துள்ள நவீன 'டார்கெட் தெரபி மூலம், எங்கள் மையத்தில் சிகிச்சை பெற்ற 7 பெரியவர்களில் ஐந்து பேர் தற்போது முழு ஆரோக்கியத்துடன் உள்ளனர். குழந்தைகளுக்கு அளிக்கப்படும் நவீன சிகிச்சைகள் மூலம் 5ல் 4 குழந்தைகள் புற்றுநோயிலிருந்து மீண்டு வருகின்றனர்.

மேலும் முதியவர்கள் மட்டுமன்றி சிறுவயது குழந்தைகளுக்கும் இத்தகைய நவீன சிகிச்சைகள் அதிகம் பயனளிப்பதாக இருப்பதை இத்தரவுகள் உறுதிப்படுத்துகின்றது என்று கூறினார் இதனை தொடர்ந்து மருத்துவர்கள் அன்னபூரணி,அனிதா, வெங்கடேஸ்வரன் ஐயோ கூறுகையில்,இனோடுசுமாப் போன்ற மருந்துகள் புற்றுநோய் செல்களில் உள்ள புரதத்தை அடையாளம் கண்டு, அந்த செல்களை மட்டும் நேரடியாகத் தாக்குகின்றன இது குணப்படுத்தவே முடியாது எனக் கருதப்பட்ட நிலையிலும் குழந்தைகளுக்குப் புதிய நம்பிக்கையைத் தருகிறது.

'இதுவரை 1,000க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு எங்கள் மையத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. எங்களது சிகிச்சையால் 80% குழந்தைகள் குணமடைந்து வருவது ஒரு மிகப்பெரிய சாதனையாகும்,தென் தமிழகத்திலேயே முதன்முதலாக எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை மையத்தை எமது மருத்துவமனை தொடங்கியது. இதுவரை 400க்கும் மேற்பட்டோருக்கு இந்த சிகிச்சை வெற்றிகரமாகச்செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவித்தனர். இந்த நிகழ்வில் மருத்துவ நிர்வாகி டாக்டர். கண்ணன் மற்றும் மருத்துவக் குழுவினர்கள் உடனிருந்தனர்.

# 3-ஆம் காலாண்டு -2025 - ல் நிகர லாபம் ரூ.3,061 கோடி : இந்தியன் வங்கி நிதிநிலை அறிக்கை!




சென்னை, பிப்.04–

இந்தியன் வங்கி 2025 – ஆண்டின் 3–ஆம் காலாண்டு நிதிநிலை அறிக்கை வெளியீட்டின் செய்தியாளர்கள் சந்திப்பு சென்னை இந்தியன் வங்கியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. நடப்பு நிதியாண்டின் டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்த மூன்றாவது காலாண்டில், இந்தியன் வங்கி ரூ.3,061 கோடி நிகர லாபத்தை ஈட்டியுள்ளது. கடந்த 2024–25 நிதியாண்டின் டிசம்பர் காலாண்டில் வங்கியின் நிகர லாபமான ரூ.2,852 கோடியை விட இது 7.33 சதவீதம் அதிகமாகும். இந்தியன் வங்கி வெளியிட்ட நிதிநிலை முடிவுகளின்படி, வங்கியின் நிகர வட்டி வருவாய் 7.50 சதவீதம் அதிகரித்து ரூ.6,896 கோடியாக உயர்ந்துள்ளது. முந்தைய ஆண்டின் இதே காலாண்டில் இது ரூ6,415 கோடியாக இருந்தது. வங்கியின் ஒட்டுமொத்த வருவாய் ரூ.17.912 கோடியிலிருந்து உயர்ந்து, தற்போது ரூ19,663 கோடியை எட்டியுள்ளது. வங்கியின் மொத்த சதவீதம் டெபாசிட் தொகை 12.62 வளர்ச்சி கண்டு ரூ.7,90,923 கோடியாக உள்ளது. முந்தைய ஆண்டு இதே காலத் தில் இது ரூ7,02,282 கோடியாக இருந்தது. மேலும், வங்கி எதிர்கால இழப்புகளை ஈடு கட்ட ஒதுக்கும் நிதி ரூ.1,059 கோடியிலிருந்து ரூ.857 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. வாராக்கடன் விகிதம் கணிசமாகக் குறைந்துள்ளது.

மொத்த வாராக்கடன் 3.26 சதவீ தத்திலிருந்து தற்போது 2.23 சதவீதமாகக் குறைந்துள்ளது. பண மதிப்பில், முந்தைய ஆண்டில் ரூ.18,208 கோடியாக இருந்த வாராக்கடன், தற்போது ரூ.14,268 கோடி யாக சரிந்துள்ளது.

நிதிநிலை முடிவுகளில் சிறப்பான லாப விவரங்கள் வெளியானதைத் தொடர்ந்து, மும்பை பங்குச்சந்தையில் இந்தியன் வங்கியின் பங்குகள் முதலீட்டாளர்களிடையே வரவேற்பை பெற்றன. வங்கியின் பங்கு விலை 3.25 சதவீதம் உயர்ந்து, ரூ.876.5 என்ற விலையில் வர்த்தகமானது.சொத்துக்கள் மீதான இலாபமீட்டல் நிலை (RoA), நிதியாண்டு'25–ன் 9 மாத காலஅளவில் இருந்த 1.31% என்பதிலிருந்து நிதியாண்டு'26–ன் 9 மாத காலஅளவில் 1%வணிக செயல் முறை உயர்ந்து 1.32% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது. பங்குகள் மீதான இலாபமீட்டல் நிலை நிதியாண்டு'26–ன் 9 மாத காலஅளவில் 19.66% ஆக இருக்கிறது. வருவாய்க்கான செலவு விகிதம், நிதியாண்டு'26–ன் 9 மாத காலஅளவில் 46.40% ஆக இருக்கிறது.



ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் எக்கட்டாம்பாளையம் ஊராட்சி வாய்க்கால் புதூரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை துவக்கி வைத்தார். இதில் மண்டல மேலாளர் (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம பானுமதி ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் கலந்து கொண்டனர் .



திமுக துணை பொதுச்செயலாளர் கனிமொழி எம்பியிடம் தென்காசி வடக்கு மாவட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் குறித்து மாவட்டச் செயலாளர் ராஜா எம் எல் ஏ , டாக்டர் ராணி ஸ்ரீகுமார் எம்பி கோரிக்கை மனுவில் தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில், வாசுதேவ நல்லூர் தொகுதிகளில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் குறித்து நெல்லையில் நடந்த கருத்து கேட்பு கூட்டத்தில் திமுக துணை பொதுச் செயலாளர் கனிமொழி எம்பி தலைமையிலான தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினரிடம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ, மற்றும் தென்காசி எம்பி ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் வழங்கினர். இந்த நிகழ்வின் போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் யூஎஸ்டி சீனிவாசன் மற்றும் வடக்கு மாவட்ட நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# திருப்பூர் சுகுமாறன் நகர் பகுதி மக்களுக்கு விரைந்து பட்டா கிடைக்க எம்எல்ஏ நடவடிக்கை



திருப்பூர், பிப். 04–

திருப்பூர் மாவட்டம் திருப்பூர் தெற்கு வட்டம் திருப்பூர் டவுன் கிராமம் "வார்டு பிளாக், 1 சுகுமாறன் நகர் புல எண் 1/1 மற்றும் 1/3 ஆகிய புல எண்களில் 12.78 ஏக்கர்" நொய்யல் ஆறு புறம்போக்கு நிலத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக 496 குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள். (தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய பராமரிப்பில் உள்ள இடம்) மேற்கண்ட நிலத்திற்கும் நொய்யல் ஆறுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதால் வாரியத்தின் பெயரில் அரசாணை பெற்று அவர்களுக்கு பட்டா கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீ.வ.ஆ) ஆகியோர் கூட்டுப் புலத்தணிக்கை மேற்கொண்டு வாரியத்திற்கு வழங்கலாம் என்ற அறிக்கையினை அரசுக்கு அனுப்பப்பட்டது வாரியத்தின் பெயரில் அரசாணை பெறவேண்டி நில நிருவாக ஆணையர் அவர்களிடம் குறிப்பாணை அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளதாக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் 12.08.2025 ம் தேதியிட்ட கடிதம் மூலம் தகவல் அளித்துள்ளார் . இதையடுத்து ஆணையர் விரைந்து பரிந்துரைத்து பட்டா கிடைத்திட உதவுமாறு கேட்டு கொண்டார் திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ்.

# காளையார்கோவில் புனித மைக்கேல் மெட்ரிக் மேல்நிலை பள்ளி ஆண்டு விழா



காளையார் கோவில், பிப்.04–

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் புனித மைக்கேல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியின் நடப்பு ஆண்டு விழாவில் ஆண்டறிக்கை வாசித்தல், அதிக மதிப்பெண் பெற்ற மாணவ - மாணவிகளுக்கு பரிசளித்து ஊக்குவித்தல், பள்ளியில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசளித்தல் போன்ற நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன . இதைத்தொடர்ந்து விஜய் டி. வி புகழ் (கலக்கப்போவது யார் ) அரக்கோணம் தினேஷ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

பலகுரல் மன்னன் ஈரோடு சஞ்சய் மற்றும் ராணி வேலுநாச்சியார் அரிமா சங்கத்தின் பட்டயத் தலைவரும் மகிளா காங்கிரஸின் மாநில துணைத் தலைவருமான ஸ்ரீ வித்யா கணபதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பள்ளியின் சிறப்பான நிர்வாகத்தை பாராட்டினார். விழாவில் புனித மைக்கேல் கல்விக் குழுமத்தின் தலைவர் லயன் டாக்டர் மதிப்புமிகு ஸ்டாலின் ஆரோக்கியராஜ் அவர்களும் செயலாளர் பாத்திமா மைக்கேல் அவர்களும் , சி.இ.ஒ. பிரிஜட் நிர்மலா, துணைத் தலைவர் செர்ஜியஸ் ஆண்டோ மைக்கேல், மற்றும் கல்விக் குழுமத்தில் பணியாற்றும் முதல்வர்கள் ஆசிரியர்கள் மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவிற்கு வந்திருந்த பெற்றோர்கள் பள்ளியின் நிர்வாகத்தை பாராட்டிப் பேசினார்கள். விழாவின் நிறைவில் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவினை பள்ளியின் முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோரின் மேற்பார்வையில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.



மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.54 காஜிமார் தெரு பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் ஆய்வு மேற்கொண்டு அப்பகுதி பொதுமக்களிடம் குறைகளை நேரில் கேட்டறிந்தார் அருகில் மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் மற்றும் மாநகராட்சி பொறியாளர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.




# காண்டாமிருக வண்டு மேலாண்மைக்கு பக்கெட் டிராப் விவசாயிகளுக்கு செயல்விளக்கம்



கன்னியாகுமரி, பிப். 4–

தென்னை மற்றும் வாழை பயிர்களை அதிகமாக பாதிக்கும் காண்டாமிருக வண்டு தாக்கத்தை கட்டுப்படுத்த பக்கெட் டிராப் (Bucket Trap) முறையை பயன்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கான செயல்விளக்க நிகழ்ச்சி சித்தரேவு கிராமத்தில் நடைபெற்றது.

இந்த செயல்விளக்கத்தை மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த எஸ்.ஆகாஷ் நடத்தினார்.

நிகழ்ச்சியில், காண்டாமிருக வண்டு பயிர்களின் மையப்பகுதியில் புகுந்து இலைகள் மற்றும் வளர்ச்சிப் பகுதிகளை சேதப்படுத்துவதால் மகசூல் பாதிக்கப்படுவதாக விளக்கப்பட்டது.

மேலும், பெரோமோன் அடிப்படையிலான பக்கெட் டிராப் ஒரு எளிய, குறைந்த செலவு மற்றும் சுற்றுச்சூழல் நட்பு மேலாண்மை முறையாகும் என எடுத்துரைக்கப்பட்டது. பக்கெட் டிராப் அமைக்கும் முறை, பராமரிப்பு மற்றும் வயலில் பொருத்த வேண்டிய இடைவெளிகள் குறித்து நடைமுறையாக காண்பிக்கப்பட்டது.

இதனுடன், காண்டாமிருக வண்டு மேலாண்மை குறித்த விளக்கக் கையேடு (Leaflet) விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, அவர்கள் தங்களது வயல்களில் இம்முறையை எளிதாக பின்பற்ற உதவப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி, தங்களது சந்தேகங்களை கேட்டறிந்தனர்.

இம்முறையை ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையின் ஒரு பகுதியாக பயன்படுத்தினால், பயிர் பாதுகாப்புடன் கூடிய நிலையான உற்பத்தி பெறலாம் என எஸ்.ஆகாஷ் தெரிவித்தார்.

# தைப்பூச திருநாளில் ஆறுமுகசாமி திருக்கோவில் மகா கும்பாபிஷேகம்



வேலூர், பிப்.04–

வேலூர் மாவட்டம் கண்ணியம்பாடி ஒன்றியம் ஆற்காட்டான்குடிசை கிராமத்தில் ஆலமரத்தடியில் அமைந்துள்ள அருள்மிகு,ஆறுமுகம் சுவாமி திருக்கோயிலில் ஜீர்னோர்த்தாரன, அஷ்டபந்தன, ரஜபந்தன, சொர்ணபந்தன, மஹாகும்பாபிஷேக(பெருஞ்சாந்தி) பெருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முன்னதாக மங்கல இசை, விக்னேஸ்வர பூஜை, புண்யாஹ வாசனம், கலாகர்ஷணம், கும்ப அலங்காரம், யாகசாலை பிரவேசம், இரண்டாம் கால, முன்றாம் கால பூஜை,ஹோமம், வேத பாராயணம், மஹாபூர்ணாஹுதி, தீபா ஆராதனை நடைபெற்றது. அதன் பிறகு சிவ வாத்தியம், மங்கள வாத்தியம், முழங்க கலசம் புறப்பட்டு ஸ்ரீ ஆறுமுகசுவாமி விமான கலசத்திற்க்கு மஹா கும்பாபிஷேகம் நடைப்பெற்றது. அதனை தொடர்ந்து மூலவருக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனை நடைபெற்றது, இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக ஸ்ரீபுரம் ஞானகுரு ஸ்ரீ சக்தி அம்மா அவர்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர், மேலும் இந்த நிகழ்ச்சியில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர், கலந்துகொண்ட பக்தர்கள் அனைவருக்கும் அன்னதனம் வழங்கப்பட்டது, நிகழ்ச்சி ஏற்பாட்டினை ஆற்காட்டான்குடிசை கிராம நாட்டாமை ஊர் பெரியவர்கள் திருப்பணி குழுவினர்கள் கிராம இளைஞர்கள் ஊர் பொதுமக்கள் என இந்த நிகழ்ச்சி ஏற்பட்டின செய்திருந்தனர், மேலும் சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவிலில் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு சிறப்பு அன்னதானம்!



சுசீந்திரம்.பிப்.4–

சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவிலில் நேற்று மதியம் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு தினத்தை முன்னிட்டு சிறப்பு அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது இந்த அன்னதான நிகழ்ச்சியில் கோவில்களின் இணை ஆணையர் ஜான்சிராணி திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் பாபு சுசீந்திரம் பேரூர் செயலாளர் சுதை சுந்தர் சுசீந்திரம் 9 வது வார்டு திமுக கிளைச் செயலாளர் அழகு தாமோதரன் திமுக ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தாமரை பிரசாத் வினோத் கோவில் கண்காணிப்பாளர் ஆனந்த் கோவில் மேலாளர் ஆறுமுகதரன் கணக்கர் கண்ணன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்

# நாகர்கோவிலில் பொன்னப்ப நாடார் முழு உருவ சிலை முதலமைச்சர் மு க ஸ்டாலின் வரும் 20 ம் தேதி திறக்கிறார்



நாகர்கோவில், பிப். 4 -

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் வருகிற 19ஆம் தேதி வருகிறார். அன்று இரவு ஓய்வு எடுக்கிறார். 20 ஆம் தேதி காலையில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதுடன், முடிந்த திட்ட பணிகளை முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடக்கி வைக்கிறார். இதில் நாகர்கோவில் வேப்ப மூடு பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள பொன்னப்ப நாடார் முழு உருவ சிலையை முதலமைச்சர் மு க ஸ்டாலின் திறந்து வைக்கிறார். மேலும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளரும், நாகர்கோவில் நகராட்சி மேயருமான மகேஷ் அவரது சொந்த செலவில் கல்லடி விளையில் அமைத்துள்ள மு க ஸ்டாலின் படிப்பகத்தையும் முதலமைச்சர் ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

தொடர்ந்து நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார். வருவாய்த்துறை, வேளாண்மை துறை சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன் உதவிகளையும் முதலமைச்சர் வழங்குகிறார். மேலும் இலவச வீட்டுமனை பட்டா வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. முதலமைச்சர் கொள்ளும் விழாவில் 25,000 மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இதற்கான முன்னேற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் சார்பில் மேற்கொள்ளப்பட்ட வருகிறது. முதலமைச்சர் விழா நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி மைதானம் அல்லது கன்கார்டியா பள்ளி மைதானத்தில் நடைபெறுவதாக தெரிய வருகிறது.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# திமுக மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நியமனம்



திருவெண்ணெய்நல்லூர். பிப்.04–

விழுப்புரம் திமுக தெற்கு மாவட்டம் திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் அருகே தடுத்தாட்கொண்டூர் கிராமத்தை சேர்ந்த ஆதி.கா.நிர்மல்ராஜ் என்பவரை மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக நியமனம் செய்து அக்கட்சியின் மாநில இளைஞரணி செயலாளரும், தமிழக துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். திமுக தலைவர் முதலமைச்சர் ஸ்டாலின் ஆணைக்கிணங்க இந்த புதிய பொறுப்புக்கு பரிந்துரை செய்த முன்னாள் அமைச்சர் பொன்முடி எம்.எல்.ஏ., விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் பொன்.கௌதம சிகாமணி ஆகியோருக்கு ஆதி.கா.நிர்மல்ராஜ் நன்றி தெரிவித்துள்ளார். மேலும் திமுக நிர்வாகிகள் பலர் இவருக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# விளாத்திகுளத்தில் திமுக சார்பில் தமிழ்நாடு தலை குனியாது என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!



விளாத்திகுளம், பிப்ரவரி.04-

தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி விளாத்திகுளம் காய்கறி மார்க்கெட் அருகே தமிழ்நாடு தலைகுனியாது என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டேயன், கழக நட்சத்திர பேச்சாளர் ஆலங்குளம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மனோஜ் பாண்டியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்த நிகழ்வில் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் பெருமாள்சாமி, மாநில நெசவாளர் அணி செயலாளர் வசந்தம் ஜெயக்குமார், விளாத்திகுளம் தொகுதி திமுக ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இமானுவேல், ராதாகிருஷ்ணன், செல்வராஜ்,மும்மூர்த்தி, நவநீதக்கண்ணன்,காசிவிஸ்வநாதன், விளாத்திகுளம் பேரூர் கழகச் செயலாளர் வேலுச்சாமி,எட்டயபுரம் பேரூர் கழக செயலாளர் பாரதிகணேசன், பொதுக்குழு உறுப்பினர்கள்,விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ், எட்டயபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் ராமலட்சுமி சங்கரநாராயணன், புதூர் பேரூராட்சி மன்ற தலைவர் வனிதா அழகுராஜ், வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், தலைமை கழகப் பேச்சாளர்கள், உள்ளிட்ட பேரூர் கழக நிர்வாகிகள்,மகளிர் அணி நிர்வாகிகள்,வார்டு செயலாளர்கள் ,கிளைச் செயலாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# களியக்காவிளை துணை அஞ்சல் அலுவலகம் புதிய கட்டிடத்திற்கு மாற்றம்



களியக்காவிளை, பிப்.4-

கன்னியாகுமரி கோட்டத்திற்குட்பட்ட களியக்காவிளை துணை அஞ்சலகம் நேற்று முன்தினம் புது கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. புதிய அலுவலகக் கட்டிடத்தை கன்னியாகுமரி கோட்ட அஞ்சல் கண்காணிப்பாளர் ஜி. செந்தில் குமார் திறந்து வைத்தார்.

குழித்துறை உப கோட்ட அஞ்சல் ஆய்வாளர் கண்மணி , களியக்காவிளை பேரூராட்சி தலைவர் சுரேஷ், மேல்புறம் வட்ட நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சில் தலைவர் மாஹீன் அபு பக்கர், வார்டு உறுப்பினர் ரஃபாய் மற்றும் கட்டிட உரிமையாளர் முகமது நாதிர் ஆகியோரின் முன்னிலை வகித்தனர்.

விழாவில் கன்னியாகுமரி கோட்ட அஞ்சல் கண்காணிப்பாளர் ஜி. செந்தில் குமார் கூறுகையில் சமூக பாதுகாப்புத் திட்டங்கள், அரசால் ஆதரிக்கப்படும் நேரடி நிதி பரிமாற்ற (ஞிஙிஜி) முயற்சிகள் மற்றும் காப்பீட்டு சேவைகள் குறித்து, குறிப்பாக அஞ்சல் ஆயுள் காப்பீடு (றிலிமி) மற்றும் அதன் பல்வேறு அம்சங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். களியக்காவிளை பேரூராட்சி தலைவர் சுரேஷ் பேசுகையில், - உள்ளூர் சமூகத்திற்கு சேவை வழங்குவதில் களியக்காவிளை துணை அஞ்சலகத்தின் முக்கிய பங்கு மற்றும் அதன் விரிவான சேவைகளை வலியுறுத்தினார். மேல்புறம் வட்ட நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சில் தலைவர் மாஹீன் அபு பக்கர், - அரசின் சேவைகளுடன் பொதுமக்களை இணைப்பதில் களியக்காவிளை அஞ்சலகம் செய்துவரும் பங்களிப்பை பாராட்டினார். தொடர்ந்து அஞ்சல் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

# திருவெண்ணெய்நல்லூர் அருகே ஆளுநர் ரவி திருக்கரங்களால் முனைவர் பட்டம் பெற்ற இளைஞர்




விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே அரசூர் கிராமத்தை சேர்ந்தவர் அ.பவானி. இவரது மகன் பவனிசெளந்தர். இவர் சிதம்பரம் அண்ணாமலை பல்கலை கழகத்தில் கல்வி பயின்று வந்தார். இந்நிலையில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நடந்த 87-வது பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி திருக்கரங்களால் ஆங்கிலத் துறையில் பவானிசெளந்தர் முனைவர் பட்டம் பெற்றார். அப்போது சக மாணவர்கள் இவருக்கு கைதட்டி உற்சாகப்படுத்தினர். மேலும் சமூக வலைதளங்களில் பரவிய இவரது புகைப்படம் ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் இவருக்கு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் சமூக வலைதளங்கள் மூலமாகவும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.






மதுரை மாவட்டம், பாப்பிஸ் ஹோட்டல் அரங்கத்தில் "என் ஊர் என் கனவு" 2030 தொலை நோக்கு வியூகம் மற்றும் திட்ட ஆவணம் தயாரித்தல் தொடர்பாக நடைபெறும் சிறப்பு கருத்தரங்கினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் , சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், பத்மஸ்ரீ முனைவர் சாலமன் பாப்பையா, மதுரை உலக தமிழ்ச் சங்கம் இயக்குநர் பர்வின் சுல்தானா ஆகியோர் உடன் உள்ளனர்.

# கோவை வடக்கு திமுக சார்பில் அறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு அமைதி பேரணி!



கோவை, பிப்.04-

பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளை முன்னிட்டு தமிழக முதல்வர் கழகத் தலைவர் முக ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கோவை வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி தலைமையில் கோவை செல்வ சிந்தாமணி குளம் முன்பிருந்து அமைதிப் பேரணி தொடங்கி செல்வபுரம் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த மாபெரும் பேரணியில் மாநில தீர்மானக் குழு இணைச் செயலாளர் முத்துசாமி துணை மேயர் வெற்றிச்செல்வன் சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் ஏ எம் உசேன் மாவட்ட பொருளாளர் அப்துல் ரகுமான் பகுதி கழக செயலாளர்கள் ராஜ்குமார் கேபிள் மணிகண்டன் லோகநாதன் கார்த்திக் செல்வராஜ் சந்தோஷ் கரும்புக்கடை ஜெயிலா சக்தி வெற்றி அணிகளின் அமைப்பாளர்கள் தளபதி தியாகு ஏகே வேலுச்சாமி தென்னை சிவா மாமன்ற உறுப்பினர்கள் வசந்தாமணி,சிவசக்தி மற்றும் சிவகணேசன்,பகுதிச் செயலாளர் எஸ்.மணி, தேர்தல் பொறுப்பாளர் சிவக்குமார், 77 ஆவது பொறுப்பாளர்கள் பஷீர் கிருஷ்ணமூர்த்தி விமல்,78வது பொருளாளர் அறிவழகன் அஜிஷ்,தென்னை சிவா வடக்கு மாவட்டம் ஆதி திராவிடர் நல குழு அமைப்பாளர்,மகளிர் தொண்டர் அணி கழக உறுப்பினர்கள் நிர்வாகிகள்,கோவை வடக்கு மாவட்ட நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் பேரூர் கழக செயலாளர்கள் வட்டக் கழக செயலாளர் வட்டக் கழக நிர்வாகிகள் 79வது வட்டக் கழக செயல்வீரர்கள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் பெருந்திரளான மகளிர் அணி மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் கலைஞரின் கழக உடன்பிறப்புகள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். 79வது வட்டக் கழக செயலாளர் எம் எச் இப்ராஹிம் நன்றியுரை வழங்கினார்.

# கோவை வள்ளியம்மன் கோவிலில் தைப்பூச திருவிழா



கோவை பிப்.04-

கோவை வள்ளியம்மன் கோவிலில் தைப்பூச திருவிழா கோவை மருதமலை அடிவாரத்தில் அமைந்துள்ள வள்ளியம்மன் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் தைப்பூசத் திருவிழா இந்த ஆண்டும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

முன்னதாக கோவில் வளாகம் முழுவதும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது.முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் திருக்கல்யாண வைபோகம் நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் வீதி உலா நடைபெற்றது. இந்திய பாரா ஒலிம்பிக் கமிட்டி துணைத் தலைவர் ஆர்.சந்திரசேகர்,ஆலயம் நல்வாழ்வு அறக்கட்டளை இயக்குனர் சர்மிளா சந்திரசேகர்,வள்ளியம்மன் அறக்கட்டளை நிறுவனர் அன்பு என்ற ஆர்.செந்தில் பிரபு ஆகியோர் கலந்து கொண்டனர்.பின்னர் விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# ஊத்தங்கரை அருகே கொங்கு தீரன் படை சார்பில் 73 ஆம் ஆண்டு தைப்பூச திருவிழா : தொழிலதிபர் ராமலிங்கம் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, பிப்.04-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்து கீழ்குப்பம் கிராமத்தில் கொங்கு வெள்ளாளர் கவுண்டர்கள் சமுதாயம் மற்றும் கொங்கு தீரன் படை சார்பில் அருள்மிகு சுப்ரமண்ய சுவாமிக்கு 73 ஆம் ஆண்டு தைப்பூச திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இத்திருவிழா கீழ்குப்பம், பனமரத்துப்பட்டி, புதூர், புளியம்பட்டி, ஸ்ரீநகர், தாதனூர் உள்ளிட்ட கிராம மக்கள் ஒன்றிணைந்து செய்தனர். தைப்பூச திருநாளான ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ஸ்ரீ விநாயகர் பூஜையும், காலை 10 மணி அளவில் காவடி பூஜையும், அலகு பாய்த்து பம்பை சிலம்பாட்டத்துடன் செடல் தேர் திருவிழா தாரை தப்பட்டை வானவேடிக்கையுடன் நடைபெற்றது. பகல் 1மணி அளவில் மாபெரும் அன்



னதானம் நடைபெற்றது. மாலை 3 மணி அளவில் வெற்றி மலை உள்ள அருள்மிகு சுப்ரமண்ய சுவாமிக்கு அபிஷேக ஆராதனை நடைபெற்றது. நிகழ்ச்சியில் பெங்களூர் தொழிலதிபர் கீழ் குப்பம் கிராமத்தைச் சேர்ந்த ராமலிங்கம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்பித்தார். கலைவாணி எலக்ட்ரிகல்ஸ் உரிமையாளர் சிவகுமார், சின்ன பாப்பா ஆறுமுகம், ஆறுமுகம், சிவானந்தம், முருகேசன், சிங்காரவேல், சந்திரசேகர் மற்றும் கொங்கு தீரன் படை உள்ளிட்ட ஆறு கிராம கிராம மக்கள் ஒன்றினைந்து தைப்பூச திருவிழாவை வெகு விமர்சையாக கொண்டாடினர்.

# மெட்ராஸ் ஐஐடி ஆய்வு மூலம் இந்திய நகரங்களில் மாசுபட்டு வரும் குடிநீருக்கு தீர்வு!

சென்னை, பிப்.04-

இந்திய நகரங்களில் குடிநீர் பாதுகாப்பு குறித்த கவலை அதிகரித்து வருகிறது.

தேசிய நிலத்தடி நீர் மதிப்பீடுகள், பல பகுதிகளில் நைட்ரேட்டுகள், ஃப்ளூரைடு, ஆர்செனிக் மற்றும் கனமான உலோகங்கள் போன்ற ரசாயன மாசுபாடுகளின் இருப்பை வெளிப்படுத்துகின்றன. மத்திய நிலத்தடி நீர் வாரியத்தின்படி, இந்தியாவில் 20% நிலத்தடி நீர் மாதிரிகள் பாதுகாப்பான ரசாயன வரம்புகளை மீறுகின்றன. இந்த மாசுபாடுகள் நீரின் சுவை, வண்ணம் அல்லது தெளிவத்தை பாதிக்காததால், குடும்பங்கள் நீண்ட காலம் தெரியாமல் அபாயகரமான நீரை உட்கொள்ளலாம்.

இந்தூர் போன்ற நகரங்களில் நீர் ஆதார மாற்றங்கள் மற்றும் சுத்தம் செய்யப்படாத கழிவு கசிவு, சில மண்டலங்களில் நீரின் தரத்தை பாதிக்கின்றன. காந்தி நகர், கிரேட்டர் நொய்டாவில் காட்டுமான பணிகளின் அகழ்வுகளை இயற்கைக்கு மாறாக செயல்படுத்துவதால் நிலத்தடி நீர் மாசுக்களை சந்திக்கின்றன. இதனுடன் பருவநிலை மாற்றங்கள் சமச்சீரற்று போவதாலும் நீர் மேலாண்மை மிகவும் சிக்கலாகின்றன. மாநகராட்சி அமைப்புகள் புனரமைப்பு வசதிகள் மற்றும் வினியோக அமைப்புகளை முயற்சித்தாலும்

இவற்றுக்கினா கிடையில் சேவைகள் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடுகளால் நிலத்தடி நீரின் தரம் மேம்படுவதில்லை.

இந்நிலையில் வீடுகளில் நீர் சுத்தகரிப்புக்கான வாட்டர் பில்டர்கள் சுத்தமான குடிநீர் பெறுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

நவீன நீர் வடிகட்டி தீர்வுகள் பல்வேறு நீர் நிலைகளை கையாள வடிவமைக்கப்பட்டுள்ளன, உடல் அசுத்திகளை அகற்ற உதவுகின்றன, ரசாயன மாசுபாடுகளைக் குறைக்கின்றன மற்றும் தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகளை அழிக்கின்றன. சுத்திகரிக்கப்பட்ட குடிநீருக்கு தொடர்ச்சியான அணுகல் சிறந்த செரிமானம், மேம்பட்ட நோய் எதிர்ப்பு மற்றும் ஒட்டுமொத்த நலனை ஆதரிக்கிறது.

# விடுதலை வேங்கைகள் கட்சியினர் நூதன முறையில் ஆர்ப்பாட்டம்



ஈரோடு, பிப். 4-

விடுதலை வேங்கைகள் கட்சி மாநில தலைவர் தமிழின்பன் ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் ஒரு மனு கொடுத்தார் .

அதில் கூறப்பட்டுள்ளதாவது

ஈரோடு பவானி சாலை லாரி ஓனர்கள் அசோசியேசன் பங்க் அருகில் சேட் கோயில் செல்லும் வழிச்சாலையில் அரசு மதுபானக்கடை இயங்கி வருகிறது

மக்களுக்கு இடையூறாக உள்ள இந்த மதுபான கடையை உடனே அகற்ற வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. இது தொடர்பாக சென்ற வருடம் கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களை அவர்கள் மாலையாக அணிந்து கண்களை கட்டிக்கொண்டு மாநகரத் தலைவர் நடராசு ஈரோடு தெற்கு மாவட்ட தலைவர் வேங்கை வீரமுத்து திருப்பூர் மாவட்ட செயலாளர் மகேந்திரன் தமிழ்நாடு உழைப்பாளி மக்கள் கட்சி தலைவர் முருகேசன் கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் குமார் ஆகியோருடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் . அப்போது அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நுழைய முயன்றனர். அப்போது அவர்கள் காவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தி கண்களை கட்டியுள்ள கருப்பு துணியை அகற்றிவிட்டு மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தனர். இது குறித்து போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் தவறும் பட்சத்தில் மக்கள் திரட்டி போராட்டம் நடத்துவோம் என்று விடுதலை வேங்கைகள் கட்சி மாநில தலைவர் தமிழின்பன் கூறினார்.

# தருமபுரி மாவட்ட மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் மத்திய பட்ஜெட் குறித்து கருத்து!

**தருமபுரி, பிப்ரவரி.04–**

**தருமபுரி மாவட்ட மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் மத்திய பட்ஜெட்டை குறித்து மாவட்ட செயலாளர் இரா. சிசுபாலன் வெளியிட்டுள்ள அறிக்கை:**

**நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதியமைச்சர் தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சலுகைகள் அளிப்பதாகவும் , விவசாயிகள், தொழிலாளர்கள் உள்ளிட்ட உழைக்கும் மக்களுக்கு பாதகம் இழைப்பதாகவும் அமைந்துள்ளது. விவசாயம் சார்ந்த நடவடிக்கைகள், கிராமப்புற மேம்பாடு, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலன் ஆகியவற்றுக்கான செலவினங்கள் கடுமையாகக் குறைக்கப்பட்டுள்ளன. உணவு, உரம் உள்ளிட்ட பொருட்களுக்கான மானியங்கள் வெட்டப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகளும், பொதுமக்களும் பெரிதும் பாதிக்கப்படுவர். இத்தகைய மக்கள் விரோத பட்ஜெட்டை வன்மையாக கண்டிக்கிறோம்.**

**தருமபுரி மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தருமபுரி– மொரப்பூர் ரயில் இணைப்பு பட்ஜெட்டில் அறிவிக்கப்படாதது ஏமாற்றம் அளிக்கிறது. இத்திட்டத்தை உடனடியாக அறிவித்து செயல்படுத்த வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வலியுறுத்துகிறோம் என தெரிவித்துள்ளார்.**

# பேரறிஞர் அண்ணா 57-வது நினைவு தினம் அதிமுக எம்எல்ஏ டி.எம்.தமிழ்செல்வம் மரியாதை



ஊத்தங்கரை, பிப்ரவரி. 04

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57-வது நினைவு தினம் ரவுண்டானா பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலை அருகில் நடைபெற்றது இந்த நிகழ்விற்கு, நகரச் செயலாளர் சிக்னல் ஆறுமுகம் தலைமை தாங்கினார். இதில் ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் டி.எம். தமிழ்செல்வம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில் பர்கூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.இ.கிருஷ்ணமூர்த்தி மாவட்ட துணைச் செயலாளர் சாகுல் அமீது, மத்திய ஒன்றிய செயலாளர் திருஞானம், வடக்கு ஒன்றிய செயலாளர் வேடி, தெற்கு ஒன்றிய செயலாளர் வேங்கன், மருத்துவர் அணி மாவட்ட செயலாளர் இளையராஜா, முன்னாள் ஒன்றிய செயலாளர் தேவேந்திரன், விவசாய அணி ஜீவானந்தம், உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மாவட்ட நுகர்வோர் சங்கங்களின் கூட்டமைப்பினர் ஒன்றிணைத்து திருப்பூர் மாவட்ட ஆட்சியரிடம் மனு!



திருப்பூர்,பிப்.04-

அரசாங்க இடத்திலுள்ள ஆக்கிரமிப்பை மீட்டெடுக்க வேண்டுமென புகாரளித்திருந்த மாவட்ட நுகர்வோர் சங்கங்களின் கூட்டமைப்பின் செயலாளரை வீடு புகுந்து மிரட்டியவர்கள் மீது திமிஸி பதிந்து கைது செய்ய வேண்டும்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வாரந்திர கூடத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன் அவர்களிடம் மாவட்ட நுகர்வோர் சங்கங்களின் கூட்டமைப்பினர் மனு அளித்தனர். இதில் தலைவர் நல்லூர் சண்முக சுந்தரம் , செயலாளர், ஈ.பி.அ.சரவணன், பொருளாளர் ஹாஜி லியாகத் அலி , இணை செயலாளர் , சிந்து சுப்பிரமணியம், துணைத்தலைவர்கள் கிருஷ்ணசாமி, மணிக்குமார், துணை செயலாளர் ரவி, செயற்குழு உறுப்பினர்கள். ஜான் சாமுவேல், ஹரிகரன் .ராமர், காதர் பாட்சா, கோவிந்த ராஜ், வக்கீல். வஞ்சிபாளையம் துரை, ஈஸ்வரன், பத்து ரூபாய் இயக்க மாவட்ட செயலாளர் செல்லம், ஜானகிராமன், உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு வலியுறுத்தினர்.

இது தொடர்பாக அளித்துள்ள மனுவில்.... திருப்பூர் மாவட்ட நுகர்வோர் சங்கங்களின் கூட்டமைப்பின் செயலாளரும் திருப்பூர் நுகர்வோர் நல முன்னேற்ற சங்க தலைவருமான ஈ.பி.அ.சரவணன் திருப்பூர் வடக்கு வட்டத்திலுள்ள நெருபெரிச்சல் பகுதியிலுள்ள அரசு புறம்போக்கு இடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள திருமண மண்டபத்தை மீட்டெடுத்து அரசாங்க இடத்தை பாதுகாக்க வேண்டுமென புகார் மனுகள் கொடுத்ததன் காரணமாக அந்த மண்டபத்தின் அறக்கட்டளையைச் சார்ந்த சிலர் திருப்பூர் வடக்கு மாநகரம் போயம்பாளையம் பழனிச்சாமி நகரிலுள்ள ஈ.பி.அ.சரவணன் வீடு தேடிச் சென்று வீட்டில் உள்ளே புகுந்து மேற்கூறிய பிரச்சனையை கைவிட்டு ஒதுங்கிக் கொள்ளுமாறு மிரட்டல் விடுத்துள்ளனர். மேலும் ஈ.பி.அ.சரவணன் இது குறித்து காவல்துறையிடம் பல்வேறு முறை புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்க மறுத்துள்ளனர்.

மேலும் இது தொடர்பாக காவல் துறை உயர் அதிகாரிகளை ஈ.பி.அ.சரவணன் நேரில் சந்தித்து புகாரளித்த பிறகும்கூட எவ்வித நடவடிக்கை மேற்கொள்ள வில்லை குறிப்பாக மேற்படி அத்துமீறி ஈ.பி.அ.சரவணனின் வீட்டில் புகுந்து புகாரை திரும்ப பெற கூறி மிரட்டிய 4நபர்கள் மீது வழக்கு பதிய கூறினால் ஈ.பி.அ.சரவணன் மீது தொடர்ச்சியாக பொய் வழக்கு போடப்படும் என அச்சுறுத்துவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே மாவட்ட நிர்வாகமும் மாநகர காவல்துறையும் மேற்படி ஈ.பி.அ.சரவணனில் வீட்டில் புகுந்து புகாரை திரும்ப பெற கூறிய நபர்கள் மீது சட்டரீதியாக திமிஸி வழக்கு பதிந்து மேற்படி 4 நபர்கள் நடவடிக்கை எடுத்து சமூகத்தில் பொது பணிகளை செய்து வருகின்ற ஈ.பி.அ.சரவணனின் பாதுகாப்பை உறுதிசெய்ய அவரது வீட்டுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டுமென திருப்பூர் மாவட்ட அனைத்து நுகர்வோர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறாக அதில் கூறப்பட்டுள்ளது.


# பத்திரம் காணவில்லை

**தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஊரணிபுரம் அஞ்சல், புதுவிடுதி, வடக்குத் தெரு, கதவு எண். 1/105.2 முகவரியில் வசிக்கும் திரு.மயில்வாகனன் மகன் வெங்கடேசன் அவர்களிடம் தகவல் பெற்ற பட்டுக்கோட்டை அட்வகேட் ஆ. மாஸ்கோ கொடுத்த அறிவிப்பு.**

**புதுவிடுதி வடக்கு தெருவில் அமைந்துள்ள புல எண்.14/1 தி புஞ்சை மனை நிலத்தின் மூல ஆவண எண். 83/1996 மற்றும் அதன் தொடர்புடைய கடன் அடமான பத்திர எண். 198/ 2008 அசல் ஆவணங்களை கடந்த 30.01.2026 ஆம் தேதியன்று ஊரணிபுரம் கடை தெருவில் ஜெராக்ஸ் எடுக்க சென்ற போது காணாமல் போய்விட்டது. இதுநாள் வரை கிடைக்கவில்லை.**

**மேற்காணும் பத்திரங்களை யாரேனும் கண்டெடுத்தால் எனது கட்சிகாரரிடம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் மேற்படி ஆவணங்களில் வில்லங்கம் இருந்தால் இன்றைய தேதியிலிருந்து ஏழு (7) தினங்களுக்குள் தெரிவிக்குமாறும் இல்லையென்றால் பிற்காலத்தில் வில்லங்கம் உண்டானால் அது எனது கட்சிகாரரை கட்டுப்படுத்தாது என தெரிவித்துக் கொள்கிறேன்.**

**தொடர்புக்கு**
**செல் : 99437 37310**



DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001. Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.